நெஞ்சுக்கு நீதி நீ!

நெஞ்சுக்கு நீதியுரைக்கின்ற வேந்தே!
நெடுவழியைக் கடந்திடவே கல்லும் முள்ளும்
பஞ்சாகக் கருதியுன்றன் கால்கள் தோய்ந்த
பச்சைரத்தம் பரிமாற்றம் மறந்தா போகும்?
பிணி, வறுமைச் சூழலிலும் கொள்கை கொண்டே
அஞ்சாமல் அயராமல் பணிகள் செய்தாய்!
ஆரூரான் உனைநினைத்தால் உதிரம் கொட்டும்!

திருக்குவளை கண்விழித்த தமிழர் முத்தே!
திராவிடர்தம் வாழ்வுயர்த்த பிறந்த கோவே!
தருக்கரையே அழிப்பதற்கெ முழந்த ஞானி!
தலைவன்நம் அண்ணாவின் இனிய தம்பி!
உருக்கிய நல்லொளி வீசும் உயர்ந்த பொன்னாய்
உள்ளமெலாம் தமிழ்வளர்த்த உயிரே! வானில்
பெருக்கற்போல் முளைத்திருக்கும் வெள்ளிக் கூட்டப்
பெரும்படையின் தலைவனேநீ வையம் வாழ்க!

அண்ணாவின் கொள்கைத்தீ அழிந்தி டாமல்
எந்நாளும் வளர்த்திடவே எழுதிப் பேசிக்
கண்ணயராப் பணிசெய்தார்!கட்டிக் காத்தே
கழகத்தை வழிகண்ட கடமை வீரன்!
பண்ணாளும் புலவரெல்லாம் அமுதுப் பேச்சைப்
புகழ்கின்ற செந்தமிழ்ச் சொல் வாய்மைத் தீரன்!
மண்ணாளும் மடையர்கள் சூழ்ச்சி வீழ
மதிசெய்து முடித்திட்ட வல்ல சூரன்!

திரைக்கதையா? நாடகமா? எழுத்து, பேச்சின்
தினத்தாளா? கவிதைகளா? நெஞ்சை ஈர்க்கும்
உரையாடல் யாவையுமே தமிழ்தான் மூச்சு!
உணர்ச்சிதரும் கொள்கைகளில் அணிவ குப்பு!
திருக்குறளின் ஓவியமா? கவிதை கூறும்
சங்ககால இலக்கியமா? இதனில் யாரும்
நெருங்கிடாஎம் ஒப்பற்ற தலைவன் நீதான்!
நிமிர்ந்தநடை அரிமாவே கலைஞர் வாழ்க!

சோதனைகள் பலவந்து தாக்கும் போதும்
சிரிப்புடனே முகங்காட்டி வெற்றி கண்டாய்!
வேதனைகள் நெஞ்சத்தைப் பிளந்த பின்னும்
வேங்கையதாய்த் துடித்தெழுந்து பகையைக் கொன்றாய்!
சாதனைகள் செய்தவன்நீ!தமிழர் வாழ்வின்
சரித்திரத்தில் நின்றவன்நீ!அண்ணா தந்த
போதனைகள் ஏற்றவன்நீ!பெரியார் கண்ட
பகுத்தறிவுப் பாசறையைக் காத்தாய் வாழீ!

வயலெல்லாம் விளைச்சலாலே உயிரைக் காக்கும்
வடிவம்தான் நீஎமக்கு நாளும் தோன்றும்!
வயதெல்லாம் நீசெய்த தொண்டைக் கூறும்!
வரலாறு உன்பெயரைச் செதுக்கி வைக்கும்!
புயற்காற்று உன்முன்னர் பலமி ழக்கும்!
பூகம்பம்தன் முடிவை மாற்றிக் கொள்ளும்!
அயல்நாட்டார் குறிப்பெடுத்து நெஞ்சில் போற்றும்
அருளாளன் எம்கலைஞர் வாழ்க நீடே!

காட்டாறு கடந்துவந்த பாதை தோறும்
கழகத்தின் வரலாறு உன்னைக் கூறும்!
கோட்டான்கள் வழிமறித்து நின்ற போதும்
கொள்கைகளின் உறுதியினை உன்னைப் பேசும்!
ஏட்டாலும், பேச்சாலும் செந்நீர் சிந்தி
இனமொழியைக் காத்திட்ட தியாகம் சொல்லும்!
பாட்டாலும் உன்வோ்வை கொஞ்ச மன்று;
பணி செய்து கிடந்ததுதான் உனது தொண்டாம்!

உரிமையினை இழக்கலாமா? தமிழா, உன்றன்
உடம்பினிலே துணியின்றி வாழ லாமா?
நரிக்குணத்தார் பளபளப்பில் மயங்க லாமா?
நம்பெரியார், பேரறிஞர், கலைஞர் தீட்டி
வரைந்திட்ட கொள்கைகளை மறவ லாமா?
வண்டமிழர்க் கூட்டம்நீ வீழ லாமா?
திரியெழுதும் ஒளியைப்போல் நிமிர்ந்து வாழத்
திராவிடமே தளபதியார் தலைமை நிற்பாய்!

கவிஞர் தமிழ்தாசன்
கழக தீர்மானக்
குழுத் தலைவர்

திரைப்பட இயக்குநர் மணிரத்தினம் பிறந்தநாள்!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜூன் 3- திரைப்பட இயக்குநர் மணிரத்தினம் பிறந்தநாளையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தி வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:

ஒவ்வொரு நாளும் தன்னைப் புதுப்பித்துக் கொண்டு, தணியாத தாகத்துடன் சினிமாவை அணுகும் இயக்குநர் மணிரத்னம் அவர்களுக்குப்

பிறந்தநாள் வாழ்த்துகள்!

அவரது பேரார்வம், புதிதாக வரும் இளைஞர்களுக்கும் பாடம்!

மனித மனங்களின் ஆழத்தை அழகுணர்ச்சியோடு வெளிப்படுத்தும் மேலும் பல படைப்புகளைத் மணிரத்னம் அவர்கள் வழங்கி மகிழ்விக்க விழைகிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

விழுப்புரம் தெற்கு மாவட்டத்தில்

முத்தமிழறிஞர் கலைஞர் 103வது பிறந்தநாள் விழா!

மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கௌதம சிகாமணி அறிக்கை!

விழுப்புரம், ஜூன் 3- விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை வருமாறு:

உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் காலத்தை வென்ற காவிய நாயகர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு, இன்று (ஜூன் 3) காலை 9 மணிக்கு விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருவெண்ணெய் நல்லூரில் உள்ள முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருஉருவச் சிலைக்கு , மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி மாலை அணிவித்து மரியாதை செய்கிறார்.

தொடர்ந்து நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்

தொடர்ந்து மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி கலந்துகொள்ள உள்ள தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள் :காலை 9.30 மணி தி.எடையாரில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

காலை 10 மணி திருவெண்ணெய் நல்லூர் (மேற்கு) ஒன்றியம் , வளையாம்பட்டில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

காலை 11.00 மணி காணை (தெற்கு) ஒன்றியம் காணையில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

மாநில மாவட்ட நிர்வாகிகள் கலந்துகொள்ள இருக்கும் இந்நிகழ்வுகளில் கழகத் தோழர்களும் பொதுமக்களும் கலந்துகொள்ள கேட்டுக்கொள்கிறேன்

மேலும் , ஜூன் 3 அன்று காலை 9 மணிக்கு , விக்கிரவாண்டி சிந்தாமணி பகுதியில் அமைந்துள்ள தலைவர் கலைஞர் அவர்களின் திருஉருவச் சிலைக்கு விழுப்புரம் (தெற்கு) மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட கழக அவைத் தலைவர் ம.ஜெயச்சந்திரன் மாலை அணிவித்து மரியாதை செய்கிறார். முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் அன்னியூர் சிவா உள்ளிட்ட மாநில மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொள்ள உள்ள இந்நிகழ்வில் கழகத் தோழர்களும் பொதுமக்களும் கலந்து கொள்ள அழைக்கிறேன்

தமிழினம் தழைக்க உழைத்திட்ட

தலைவர் கலைஞர் புகழ் ஓங்கட்டும்

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

தலைவா! உன் புகழ்வாழ்க!

தந்தை பெரியாரும்
சிந்தைநிறை அண்ணாவும்
விந்தையென ஓருருவாய்
வந்த எங்கள் மன்னவனே!

"வீழ்வதுநாம் என்றாலும்
வாழ்வதுநம் தமிழ்"என்றே
ஆழ்மனத்தி லே,பதிய
அனைவருக்கும் சொன்னவனே!

அகரச்செந் தமிழுக்கோர்
அரணாக வாய்த்தவனே!
சிகரத்தின் உயரத்தில்
செம்மொழியை வைத்தவனே!

இன்னலுற்று வெஞ்சிறையில்
வெந்தவனே! எந்தமிழர்
முன்னேறப் படிக்கட்டாய்
முதுகெலும்பைத் தந்தவனே!

அடல்மறவர், யாருக்கும்
அஞ்சாத தமிழர்என
உடன்பிறப்புப் பெரும்படையை
உருவாக்கி வென்றவனே!

தென்புலத்தை மீட்கவந்த
தீரர்களை, வீரர்களை
அன்பு முகம்காட்டி
அரவணைத்துச் சென்றவனே!

மறையுமோ அழகுமுகம்?
மறக்குமோ ஆசைமுகம்?
உறங்கினால் கனவிலும்
உனதுமுகம்! எம்தலைவா!

நினைவுநாள் உனக்கில்லை!
நேற்று,இன்று, நாளைஉன்னை
நினையாத நாள்ஒன்று
நிச்சயமாய் எமக்கில்லை!

வாராது போல்வந்த
மாமணிநின் திருவடியை
ஈரக் கடலலைகள்
எப்போதும் வணங்கிஎழும்!

கோள்களும்உன் பெயர்போற்றிக்
கொண்டாடும்! நாட்காட்டித்
தாள்களும்உன் பொதுவாழ்வுச்
சாதனையைக் கவிபாடும்!

மூப்பிலும்நீ தமிழ்நாட்டை
முழுவதுமாய் சுற்றிவந்து
காப்பாற்றி வைத்ததனால்
கைகூப்பும் எண்டிசையும்!

மேற்குமலைத் தொடர்ச்சியிலே
மிதந்துவரும் காற்றும்,உன்
நாற்காலிச் சக்கரத்தை
நாடிவந்து முத்தமிடும்!

மழைமுகில்உன் எழுதுகோல்
மையில்,மையல் கொண்டதனால்
பொழியும்இளந் தூறல்எனும்
பூத்தூவி உனைவணங்கும்!

வெண்ணிலவின் தலைமையிலே
விண்மீன்கள் கூட்டம்இந்த
மண்மீதுன் நினைவிடத்தில்
மலர்வளையம் வைக்கவரும்!

ஓங்கும்எழிற் பூவனங்கள்
ஒன்றாகி அணிவகுத்துத்
தூங்கும்உன்றன் கல்லறையில்
தோரணமாய் காட்சிதரும்!

முன்விழித்து நீஎழுந்த
பின்,விழிக்கும் சூரியன்உன்
பொன்னடிக்குக் கண்விழித்துத்
தன்வணக்கம் சொல்லவரும்!

நோற்றவத்தால் பிறந்தவனே!
நூலகநூல் அத்தனையும்
ஆற்றாமல் படபடக்கும்!
அறிவுமகன் உன்பிரிவால்!

தோற்றமுண்டு! முடிவில்லை!
துலங்கும்உன்பேர் காலம்வென்று
வீற்றிருக்கும் பெரும்பேறு!
விழாவெடுக்கும் வரலாறு!

கலைவணங்கும்! சிலைவணங்கும்!
"கருவில்வந்த திரு"நின்னை
மலைவணங்கும்! வான்வணங்கும்!
வையகமே உனைவணங்கும்!

உலகமொழி அத்தனையும்
ஒருகுடைக்கீழ் வந்துநின்றே
தலைவணங்கும்! உனதுபுகழ்
தமிழ்போல வாழ்க!என்றே!

கவிச்சுடர்
கவிதைப்பித்தன்